# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1714 - 2011 ජූලි මස 08 වැනි සිකුරාදා - 2011.07.08

*1714 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூலை மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| சட்டமூலங்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழங்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மால்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 60 |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2011, யூலை மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2011, யூலை மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# நானாவித அறிவித்தல்கள்

## மேல் மாகாண உயர் நீதிமன்றத்தில் கொழும்பில் அமரும் அதன் சிவில் நியாயாதிக்க செயற்பாட்டில்

வழக்கு இல. 31/2011/சிஓ

மாகொல, சபுகஸ்கந்த, பட்டிவில றோட்டில் அமைந்துள்ள ஷின் குவான்ங் லங்கா (பிவிரீ) லிமிடெட் விடயத்திலும்,

2007 ஆம் ஆண்டின் 07 ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் நீதிமன்றினால் ஒடுக்குவதற்கான விண்ணப்பம் விடயத்திலும்,

திரு. குவான்ங் யியோல் லீ 23, ஜயசிங்க றோட், கொழும்பு 6

............. மனுதாரர்

மேற்குறிப்பிட்ட மனுதாரரான கொழும்பு 6, 23, ஜயசிங்க றோட்டில் அமைந்துள்ள 'திருவாளர்கள் ஷின் குவான்ங் லங்கா (பிவிரீ) லிமிடெட் இனால் கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்றத்தினால் மேற்கூறப்பட்ட கம்பனியை ஒடுக்குவதற்கான மனுவானது, 2011, யூன் 9 ஆந் திகதியன்று சொல்லப்பட்ட நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. சொல்லப்பட்ட மனுவானது 2011 செத்தெம்பர் 19 ஆந் திகதியன்று நீதிமன்றில் விசாரணைக்காக எடுக்கப்படும் எனவும் எவரேனும் அக்கம்பனிக்கு எதிர்ப்பதற்கோ அல்லது ஆதரிப்பதற்கோ விரும்பும் நோக்கத்துடன் தாமதமாகவோ அல்லது தங்களது ஆலோசகர் மூலமாகவோ அல்லது பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி மூலமாகவோ தோற்றலாம். இம் மனுவின் பிரதி தேவைப்படும் அக்கம்பனிக்கு பங்களிப்பு செய்தோர் அல்லது பற்று வைத்துள்ளோர் அதனை விவரிக்கப்பட்டுள்ள கட்டணத்தை செலுத்துவதன் மூலம் கீழே கையொப்பமிட்டவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் :-

திரு. சந்துன் எஸ். கே. கமகே,
சட்டத்தரணி,
இல. 194, ஹெவ்லொக் வீதி,
கொழும்பு 05.

**குறிப்பு**.- சொல்லப்பட்ட மனு மீது தோற்ற விரும்பும் எவரேனுமொருவர் தனது/தங்களது அவ்வாறான கருத்துக்களின் எழுத்து மூலமான அறிவித்தலை மேற்பெயரிடப்பட்ட சட்டத்தரணி திரு. சந்துன் கமகே அவர்களுக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ கையளிக்கலாம். அவ்வறிவித்தலில் நபரின் பெயரும் முகவரியும் அல்லது தங்கள்/தங்களின் பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணி (எவரேனுமிருப்பின்) அவர்களினால் கையொப்பமிடப்படல் வேண்டும். அத்துடன் 2011, செத்தெம்பர் 18 ஆந் திகதி மாலை 6 மணிக்கு பிந்தாமல் மேலே பெயரிடப்பட்டுள்ளவரை வந்தடையுமாறு போதிய கால அவகாசத்துடன் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது நேராக சமர்ப்பித்தல் வேண்டும்.

சந்துன் எஸ். கே. கமகே,
சட்டத்தரணி.

7-210

## கொழும்பில் கூடிய மேல் மாகாண உயர் நீதிமன்றத்தில் (அதன் குடியியல்/வணிகவியல் சார்ந்த நியாயாதிக்கப் பிரயோகம்)

வழக்கு இல. H.C. (Civil) 25/2011/Co

இல. 85/1/2, காலி வீதி, தெஹிவளையில் உள்ள தேறா நெற் லங்கா (பிரைவேற்) லிமிட்டெட் விடயத்திலும்,

அத்துடன்

2007 ஆம் ஆண்டின் 07 ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பாகத்தின் கீழ் நீதிமன்றத்தினால் முடித்து வைக்கப்படுவதற்கான விடயத்திலும்,

றெலி மார்க்கற்றிங் கொன்சியூமர் இலக்றொனிக்ஸ் (பிரைவேற்) லிமிட்டெட், 615, நீர்கொழும்பு வீதி, மாபொல, வத்தளை.

............. மனுதாரர்

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட மனுதாரர் ஆகிய றெலி மார்க்கற்றிங் கொன்சியூமர் இலக்றொனிக்ஸ் (பிரைவேற்) லிமிட்டெட் தாபனத்தினால் 2011, மே 04 ஆந் திகதியன்று கொழும்பில் கூடிய மேல் மாகாண உயர் நீதிமன்றத்திடம் (அதன் குடியியல்/வணிகவியல் நியாயாதிக்கப் பிரயோக விடயத்தில்), சொல்லப்பட்ட நீதிமன்றத்தினால் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட கம்பனியை முடித்துக் கட்டுவதற்கான மனுவொன்றைச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

சொல்லப்பட்ட மனு ஆனது 2011, ஓகத்து 05 ஆந் திகதியன்று நீதிமன்றத்தின் முன்னிலையில் விசாரணை செய்யப்படுவதற்குப் பணிக்கப்பட்டுள்ளது. சொல்லப்பட்ட கம்பனியின் கடன்காரர்கள் அல்லது பங்களிப்பவர்கள் எவரேனும் சொல்லப்பட்ட மனு மீது கட்டளையிடப்படுதலை ஆதரிக்கும் அல்லது எதிர்க்கும் விருப்பம் உடையவர்களாயின் விசாரணை நேரத்தில் நேரில் அல்லது தமது வழக்கறிஞர் மூலம் தோற்றலாம். சொல்லப்பட்ட கம்பனியின் கடன்காரர் அல்லது பங்களிப்பவர் எவரேனுக்கும் இந்த மனுவின் பிரதி தேவைப்படுமாயின் கீழே கையொப்பமிட்டுள்ளவரினால் அதற்குரிய விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்துவதன் மேல் அத்தகைய பிரதி வழங்கப்படும் :-

இஸாரா குணவர்தன,
514 C, ஆர். ஏ. த மெல் மாவத்தை,
கொழும்பு 03,
தொலைபேசி : 0112503426.

**குறிப்பு**.- சொல்லப்பட்ட மனு விசாரணையின்போது நேரில் தோற்றுவதற்கு எண்ணும் எவரேனுமாள். அவ்வாறு செய்யும் தமது எண்ணம் பற்றிய அறிவித்தலை எழுத்துமூலமாக மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தரணி இஸாரா குணவர்தனவுக்கு நேரில் சமர்ப்பித்தலோ அல்லது அஞ்சலில் அனுப்புதலோ வேண்டும். இந்த அறிவித்தலில் சம்பந்தப்பட்ட ஆளின் பெயர், முகவரி அல்லது நிறுவனமாயின் நிறுவனத்தின் பெயர், முகவரி என்பன தரப்படுவதுடன் சம்பந்தப்பட்ட ஆளினால் அல்லது அவரது நிறுவனத்தின் அல்லது அவர்களினது வழக்கறிஞரினால் (எவரேனுமிருப்பின்) ஒப்பமிடப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அல்லது அஞ்சலில் அனுப்பப்படுமாயின் 2011, ஓகத்து 04 ஆந் திகதி மாலை 6.00 மணிக்குப் பிந்தாமல் மேலே பெயர் குறிப்பிடப்பட்டவர் வசம் வந்து சேரும் வகையில் போதிய கால அவகாசத்துடன் அஞ்சல் செய்யப்படல் வேண்டும்.

இஸாரா குணவர்தன,
சட்டத்தரணி.

7-220

**ஐக்கிய முஸ்லிம் உம்மாஹ் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

ஹுனைஸ் பாரூக் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 48 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் 'ஐக்கிய முஸ்லிம் உம்மாஹ் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்' எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக்கொண்ட மேற்குறித்த உம்மாஹ் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

1. தேசிய ஒருமைப்பாட்டை கட்டியெழுப்புவதற்கு முயற்சி மேற்கொள்ளல் ;

2. இலங்கையில் உண்மையான பல்லின சமுதாயத்தை உருவாக்க முயற்சி மேற்கொள்ளல்,

பிறவும்.

ஹுனைஸ் பாரூக்,
பாராளுமன்ற உறுப்பினர்,
வன்னி மாவட்டம்.

7-226/1

**வெலிகம பதுர் இஸ்லாமிய மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

ஹுனைஸ் பாரூக் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 48 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் 'வெலிகம பதுர் இஸ்லாமிய மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்' எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக்கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

1. இஸ்லாத்தை தமது வாழ்க்கை நெறியாகக் கொண்ட தனி நபர்களை உருவாக்குதல் ;

2. இஸ்லாமிய பொருளாதார ஒழுங்குமுறையை உருவாக்கலும்,

பிறவும்.

ஹுனைஸ் பாரூக்,
பாராளுமன்ற உறுப்பினர்,
வன்னி மாவட்டம்.

7-226/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.